www.tamilarangam.net

போராட்டத்தின் திசைதிருப்பு!

போராளிகளின் பலியெடுப்பு!

பிரான்சு வாழ் தமிழ் மக்களே!

விடுதலைப் போராட்ட முன்னெடுப்பில் அநுபவங்களின் வாயிலாக இயக்கங்களுக்கிடையேயான ஒற்றுமையினையும், மக்களின் ஒத்துழைப் பும் ஆதரவையும் பெறவேண்டிய இக்காலகட்டத்தில் மக்கள் காப்போன் என்னும் நாமம் சூடி, மமதை கொண்டு மக்களையும் போராளிகளையும் அழிக்கும் அயோக்கியர்களை இனியும் நாம் மன்னிக்கத்தான் வேண்டுமா?

கொள்ளையடித்தார்கள் அதனால் கொலை செய்தோம் என்று கூறுபவர் களே கேளுங்கள். குரும்பசிட்டி வன்னியசிங்கம் வீட்டில் நகைகளைக் கொள்ளையடித்துவிட்டுத் தப்பியோடும் போது தன்னைத் துரத்தி வந்த பொதுமக்கள் சிலரைப் பிரபாகரன் சுட்டுக் கொல்லவில் லையா? பலரைப் பணயம் வைத்து நீங்கள் நடத்திய கொள்ளைகளை மறந்து விட்டீர்களா? புலிகளே அரச படைகளின் வேடமணிந்து கோவில்களில் கொள்ளையடிக்க முனைந்த போது TELO இயக்க த்தினரால் நீங்கள் இனங்காணப்படவில்லையா? அதனால் தான் அவர்களையே இந்தநாட்டு அழித்தொழிக்க முனைந்தீர்களா? கொள்ளையை ஆரம்பித்து வைத்த உங்களுக்கு யார் மரணதண் டனை வழங்குவது?

விடுதலையைத் தாங்களே குத்தகைக்கு எடுத்தவர்கள் போல, புலிகள் ன்னேறி வந்து இயக்கங்களின் வளர்ச்சிக்கான முனைவோர்களை அழித்து எக்காளமிட்டு வருகின்றது. PLOTன் சுந்தரத்தில் தொ டங்கி, TELEன் ஜெகன், TELAன் ஒபராய் தேவன், TELOன் ஜெமாஸ்டர், EPRLFன் றேகன், அதன் போக்கோடு இரத்த ியாது TELOன் நூற்றுக்கும் மேற்பட்ட போராளிகளையும், அதன் வன் ஸ்ரீ சபாரட்ணத்தையும் அழித்து அவ்வியக்கத்தை முடக்கி த்து தன் பசியைத் தீர்த்துக் கொண்டது.

ழத் தேசிய விடுதலை முன்னணியோடு இணைந்து கொண்ட புலிக் ம்பல் அதனோடு சேர்ந்த வரையிலும் ஒத்துழைக்காமல் தமக்கே ரித்தான மமதையுடன் இதுவரை நடந்து வந்ததை நீங்கள் வதானிக்கவில்லையா? கண்ணிவெடிகள் மூலம் சிறு சிறு பூச்சாண்டித் தாக் தல்கள் நடாத்தி அதனால் பெருமளவு மக்களைப் புலிக்கும்பல் பலி கொடுத்துள்ளது. ஆனால் பிரதியுவற்ற வெற்றிகரமான பாரிய ரியினைவை உருவாக்கி வந்த தன் இணைப்பு இயக்கமான ELO வை அழித்தவர்கள் எப்படி விடுதலை பெற்றுத் தருவார்கள்?

www.tamilarangam.net

இதுவரை BBC ஐப் புறக்கணிப்பீட்டை, அரசின் அவலக்குரல் எல்லாம் புலிகளை நீங்கள் சாடவில்லையா? எமது கண்மணிகளைக் கொன்று விட்டு அதனை நியாயப்படுத்த BBC ஐ ஆதாரம் காட்டுவது உளறலாகத் தெரியவில்லையா? அவ்வாறாயின் நீங்களு அமெரிக்காவின் எடுபிடிகளாகி விட்டீர்களா?

படிப்பறிவில்லாத உங்களுக்கு அரசியலில் எத்தனை எழுத்துக்கள் என்று கூடத் தெரியுமா? புலிகளே எமது கண்மணிகளுக்கு மரண தண்டனை வழங்கிவைத்து உங்களுக்கு யார் அனுமதி தந்தது? பொதுமேடையமைத்தா மக்களின் தீர்ப்பைப் பெற்றீர்கள்? ஜே.ஆரை மிஞ்சிவிட்ட போக்கிரிகளல்லவா நீங்கள்?

தோழமை இயக்கங்களைத் திட்டமிட்டு அழித்து வரும் புலிகளே களத்தில் தான் எமக்குள் இணைவு ஏற்பட வாய்ப்புண்டு என்று நீங்கள் கூறியது நினைவிலுண்டா? உங்கள் செயலால் களத்தில் தனித்து நிற்கப் போகும் நீங்கள் யாருடன் இணையப் போகின்றீர்கள்? ஜே.ஆருடனா? இல்லையேல் அமெரிக்காவுடனா? மக்களோடு ஐக்கியப்பட வேண்டிய இவ்வேளையிலேயே துப்பாக்கால் பதில் கூறும் இவர்கள் நாளையையும் தமிழீழத்தில் எப்படிப் பதில் கூறுவார்கள்?

எமது பணத்தில் முழுச்சம்பளம் பெற்றுக் கொண்டும், தொலைபேசி, வானொலி மூலம் மக்களைக் குழப்பிக் கொண்டும் இருக்கும் இவர்களா விடுதலை பெற்றுத் தருவார்கள்?

எதிரிக்குத் தகவல் கொடுத்தவர்களென்று புலிகளால் சந்திகளில் துரோகிகளாகக் கொல்லப்பட்டு மின்கம்பத்தில் தொங்கியோர் பலர். இன்று எதிரி அழிக்கமுடியாத அளவு பல போராளிகளை அழித்தும் போராளிகளின் பல முகாம்களை எதிரிக்குக் காட்டிக் கொடுத்தும் எக்காளமிடும் இவ் வெறியர்களை எப்போ மின்கம்பத்தில் தா கட்டுவது?

எனவே மக்களே!

துப்பாக்கி வெறியர்களை இனம் காணுங்கள்! இன்று எமக்குத் தேவை மக்களின் அமைதியான வாழ்வே! விடுதலைப் பெற்றுத் தரத் தகுதியற்ற இவ் வெறியர்களை ஒதுக்கி விட்டு, ஒற்றுமையான ஒரு இயக்கத்தை அமைப்பதே ஒவ்வொ தமிழ் மகனின் கடமையாகும்!

விடுதலை விரும்பிகள்

[தயவு செய்து இப்பிரசுரத்தை மேலும் பிரதியெடுத்து உங்கள் நண்பர்களுக்குத் தெரியப் படுத்துங்கள்]